# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.2/2018

**P.W**. 3(LW3)

| | |
|---|---|
| Name | : திரு.ஏழுமலை |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1 மற்றும் 5 வது எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 179/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது பூந்தண்டலம் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். சாட்சி முனுசாமி என்னுடைய அண்ணன் ஆவார்.

2) என்னுடைய அண்ணன் நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகே குடியிருந்து வருகிறார். கடந்த 05.07.2017 ம் தேதி என்னுடைய அண்ணன் மகன் வேலு அவருடைய வீட்டை பூட்டிவிட்டு சாவியை அவர் வீட்டின் வாசற்படி மேல் வைத்துவிட்டு என்னுடைய வீட்டிற்கு விளையாட வந்தார். மதியம் சுமார் 1.30 மணியளவில் வேலு மீண்டும் வீட்டிற்கு சென்று பார்த்தபோது வீட்டின் கதவு திறந்திருந்தது என்று என்னிடம் வந்து சொன்னார். பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில்

உள்ளே இருந்த துணிகள் சிதறிக்கிடந்ததாக என்னிடம் சொன்னார். நான் சென்று பார்த்தபோது பீரோவில் உள்ளே இருந்த தங்க நகைகள் மற்றும் கொலுசு காணாமல் போயிருந்தது. என்னுடைய அண்ணனும், அண்ணியும் வேலைக்கு சென்றிருந்தார்கள். அதன் பிறகு நான் அவர்களிடம் தகவல் சொன்னேன். அன்று சாயங்காலம் எனது அண்ணன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

சம்பவம் பற்றி கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.2/2018

**P.W**. 4(LW4)

| | |
|---|---|
| Name | : **திரு.முரளி** |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1 மற்றும் 5 வது எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார். 2 மற்றும் 4 வது எதிரி splitup செய்யப்பட்டு இந்த விசரணையின் நகல் Crl.Rules of Practice 2019 விதி 32(5)-ன் படி CC 179/2023 வழக்குடன் இணைக்கப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது பூந்தண்டலம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சின்னராசு எனக்கு தெரியும். அவர் இறந்துவிட்டார்.என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், சின்னராசுவும் கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

நான் எழுதிய பேப்பரில் ஒரு கையெழுத்து தான் போட்டேன். நான் கூலி

வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் முனுசாமி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றபோது நானும் சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.